1981 பிப்ரவரி 6]

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதே நகராட்சியிலே செல்வபுரம் பக்கத்தில் மிகவும் ஜனநெருக்கடி அதிகம். அங்கே 2,000-க்கும் மேற்பட்ட பிள்ளைகள் ஒரே ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் படிக்கிறார்கள். ஆகவே அந்தப் பள்ளியை விரிவு படுத்தும் விதமாகவும், நெரிசலைத் தவிர்க்கவும், மற்ற பகுதிகளில் அதே போன்று ஆரம்பப் பாடசாலைகளை அமைக்க அரசு ஆவன செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றியும் அரசு ஆலோசிக்கும்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கேள்வி என்னைக் கேட்க அனுமதிக்க வேண்டும்.

Without headmistress, a school is going on. That is why I am putting another question.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறபோது, தலைமை ஆசிரியரை நியமிப்பதற்கான உத்தரவு போடப்பட்டிருப்பதாக சொன்னார்கள். படித்துப் பட்டம் பெற்ற வேலையில்லாத ஆசிரியர்கள் நிறைய பேர்கள் இருக்கும்போது, அவர்களை அப்பாயின்ட் செய்வதில் அரசுக்கு என்ன கஷ்டம் இருக்க முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று கேட்க விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேரிடையாகவும் யாரையும் அரசு நியமிப்பது கிடையாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண்கள் 201, 202, 203 பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

சேலம் இரும்பாலைத் திட்டத்தின் கீழ் மாற்று இடங்கள்.

*வினா எண் 204—செல்வி பி. விசயலட்சுமி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் இரும்பாலைக்கென குடியிருந்தவர்களைக் காலி செய்து மாற்று இடம் கொடுக்கப்பட்டவர்களுக்கு இதுவரை அவற்றிற்கென பட்டா வழங்கப்படாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எஸ். டி சோமசுந்தரம் : (அ) மற்றும் (ஆ) சேலம் இரும்பாலைக்கென ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களில் குடியிருந்தவர்களைக் காலி செய்ததில், மொத்தம் 3,002 குடும்பங்கள் வீடிழந்தன. அவ்விதம் வீடிழந்து சேலம் மாவட்டத்தின் சுற்றுப் புறக் கிராமங்களில் குடியிருந்த 1,990 குடும்பங்களுக்கு வீட்டு மனைகள் ஏற்கெனவே ஒதுக்கப் பட்டுவிட்டன. மீதமுள்ள 1,012 குடும்பங்களுக்கு வீட்டு மனை கள் கொடுப்பதற்குப் போதுமான இடங்கள், சாலை, வடக்குத் தாம்பட்டி கிராமத்தில் உள்ளன. மேலும் நில ஆர்ஜிதத்தால், பாதிக்கப்பட்டு, பிறகு தர்மபுரி, ஆந்திரா, நெய்வேலி போன்ற இதர இடங்களில் குடியேறியவர்களிடமிருந்தும் வீட்டு மனை கள் ஒப்படை செய்யக் கோரி இதுவரை வந்துள்ள 600 மனுக் களை சேலம் மாவட்ட வருவாய் அதிகாரி பரிசீலித்து வருகிறார்.

செல்வி பி. விசயலட்சுமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உப தொழில்களுக்கென நிலங்கள் எடுக்கப் படுகின்றனவா ? அப்படி எடுத்தால் நிலமற்றவர்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் கொடுக்கப்படுகிறதா என்று அறிய விரும்பு கிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் இரும்பு ஆலை நிர்வாகத்தினர், உப தொழில்கள் நடத்துவதற்காக நிலங்கள் வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அது ஏறக்குறைய 600 ஏக்கர் ஆர்ஜிதம் செய்ய வேண்டிய நிலை ஏற்படும். அப்படி ஆர்ஜிதம் செய்கிறபோது 333 பேர்கள் வீடிழப்பார்கள் என்று கணக்கிட்டு அவர்களுக்கு வீட்டு மனைகள் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் கரும்பு பயிருக்குக் குத்தகை விடப்பட்ட நிலங்கள்.

*வினா எண் 205—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

தஞ்சை மாவட்டத்தில் உள்ள திரு ஆரூரான் சர்க்கரை ஆலைக்கு கரும்பு பயிரிட குத்தகைக்கு நிலம் விட்டுக்கொடுத் திருந்த விவசாயிகளிடம் மேற்படி நிலங்களைத் திரும்பக் கொடுக் கும் உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : கரும்புப் பண் ணைக் கழக சொந்த நிலங்களுடன் இணைந்து அவைகளை சீரிய முறையில் சாகுபடி செய்வதற்கு முற்றும் தேவையான நிலங் களைத் தவிர ஏனைய குத்தகை நிலங்களை அவைகளின் சொந்தக் காரர்களுக்குத் திருப்பித்தர அரசு நடவடிக்கை எடுத்துக்கொண் டிருக்கிறது.